

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 06-03-2025


# ஆளுநரின் சிந்து சமவெளி எரிச்சல்!

சிந்து சமவெளி குறித்து தமிழ்நாடு அரசு பேசத் தொடங்கியதும் ஆர்.என்.ரவி வகையறாக்களுக்கு இருக்கப் பொறுக்கவில்லை. உடனே வரலாற்றுத் திரிபைத் தொடங்கி விட்டார்கள்.

**தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில் சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கு கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது. இதில் பங்கெடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிந்துவெளி எழுத்துகளில் 100 ஆண்டுகளாகப் புதைந்திருக்கும் புதிருக்கு விடை கண்டுபிடித்தால் எட்டரை கோடி ரூபாய் பரிசு என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இது ஆரியக் கூட்டத்தின் அடிவயிறைக் கலக்கி வருகிறது.**

சிந்து வெளிப்பண்பாடு குறித்த இவர்களது கற்பனைகள், கப்சாக்களுக்கு முற்றுப்புள்ளி விழுந்து விடும் என்ற பீதியில் உறைந்து போய்க் கிடக்கிறார்கள்.

உடனே உலக மகா அறிவாளி, தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி, தனது ஆராய்ச்சி மூளையை இதில் பயன்படுத்தத் தொடங்கி விட்டார். ‘அதை சிந்து சமவெளி என்று சொல்லக் கூடாது, சிந்து சரஸ்வதி நாகரிகம் என்றுதான் சொல்ல வேண்டும்’ என்று திரிக்கத் தொடங்கிவிட்டார்.

இது ஒன்றும் புதிய கருத்தல்ல. என்.சி.இ.ஆர்.டி.யின் ஆறாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இருப்பதைத்தான் ஆர்.என்.ரவி சொல்கிறார். வகுப்புவாத வரலாற்றாசிரியர்கள் சிந்து சமவெளி நாகரிகத்தை ‘சரஸ்வதி நாகரிகமாக’ நிறுவப் பார்க்கும் முயற்சியை எப்போதோ தொடங்கி விட்டார்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வரும் போதெல்லாம் ‘சரஸ்வதி ஆராய்ச்சி’யைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்தியாவின் தலைசிறந்த வரலாற்றாசிரியர் ரொமிலா தாப்பர் போன்றவர்கள் இதனை ஏற்பது இல்லை. ரொமிலா தாப்பர், Early India From The Origins to AD 1300 - என்ற நூலை எழுதி இருக்கிறார். அதில் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

**★ கி.மு. இரண்டாம் ஆயிரமாவது ஆண்டுகளில் வறண்டுப் போன ஹக்ரா நதிப்படுகைகளின் மீது குடியிருப்புகள் தோன்றிவிட்டன. ஆற்றின் விசையியங்குதலால் ஆற்றின் போக்கில் மாற்றங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு. இதனுடைய காலம் கி.மு.இரண்டாயிரம் ஆண்டுகள் என்று பொதுவாகக் கூறலாம்.**

**★ கக்கார் நதியை ரிக்வேதத்தில் குறிப்பிடப்படும் சரசுவதி ஆற்றுடன் அடையாளப்படுத்துவது வாதத்திற்குரியது. மேலும் ஆரம்பக் கட்டத்திலேயே சரசுவதி குறிப்பிடப்படுவதால் ஆப்கானிஸ்தானத்திலுள்ள ஹராக்ஸ்வதி என்ற சமவெளியைக் குறிக்கலாம். இவ்வடையாளப் படுத்துதலும் சிக்கல் நிறைந்ததுதான். ஏனெனில் சரசுவதி ஆறு மலைகளினூடே அறுத்துக்கொண்டு ஓடுவதாகக் கூறப்படுகிறது. இது கக்கார் நதியின் நிலப்பரப்பையும் காட்டவில்லை. சரஸ்வதி நதி ரிக்வேதத்தில் ஒளிரும் சொற்களால் வருணிக்கப் பட்டிருந்தாலும் சட்லெஜும் யமுனாவும் ஏற்கனவே தனித்த ஆறுகளாக இருந்தன. அவை கக்கார் நதிக்குள் பாயவில்லை. அது எதைக் காட்டுகிறது என்றால் ஹக்ரா அல்லது கக்கார் நதி வறண்டு மாற்றம் அடைந்த பின்னர் இத்தோத்திரப் பாடல்கள் பாடப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகிறது. பழைய ஆறு ஒன்றை வேண்டிக்கொண்டதின் மூலம் அவ்வாறு ஒரு மாயைக்கதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பெயரான சரஸ்வதி என்பதை எல்லா ஆறுகளுக்கும் பொருத்தலாம். இப்படிப்பட்ட நிலை துணைக்கண்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் நடந்திருக்கிறது.**

- என்று ரொமிலா தாப்பர் எழுதி இருக்கிறார். ரிக் வேதம், மகாபாரதம் ஆகியவற்றை வைத்து ரவி வகையறா வரலாறு தயாரித்து, அதை ‘நாசா’வே சொல்லி விட்டது என்று கப்சா விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**“சிந்துவெளி நாகரிகம் இந்தோ - ஆரிய மக்கள் இலக்கியமான வேதங்கள் பாடப்பட்டதற்கு முந்தைய காலத்தைச் சார்ந்தது. சிந்துவெளி நாகரிகம் இவ்வாரிய இலக்கியங்களின் அடையாளத்தைப் பிரதிபலிக்கவில்லை. இந்துக்களுக்கு நீண்ட வரலாறு உண்டு என்று வற்புறுத்துவதானது வேதக் கலாச்சாரத்தை இன்னும் பின்னோக்கிக் கொண்டு சென்று சிந்துவெளி நாகரிகத்தோடு அடையாளப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்குக் காரணமாக இருக்கிறது” என்றும் ரொமிலா தாப்பர் சொல்லி இருக்கிறார்.**

இதற்கு மாறாகத்தான் என்.சி.இ.ஆர்.டி. புத்தகத்தில் மாற்றத்தைச் செய்தது பா.ஜ.க. அரசு. ரிக் வேதம், குமார சம்பவம், மகாபாரதம் என்று ஆளுநர் மேற்கோள் காட்டுவது எல்லாம் ஆறாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் இருப்பதுதான். ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ளது இந்த கவுன்சில். அதனால் எதையும் எழுதிக் கொள்ளலாம்.

சரஸ்வதி நதியை மீட்கும் ஆராய்ச்சியை பல ஆண்டுகளாக பா.ஜ.க. அரசு செய்து வருகிறது. நதிதான் கிடைக்கவில்லை. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோதே மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சார அமைச்சகம் இம்முயற்சியை எடுத்தது. 2014-ம் ஆண்டில் நீர்வளத் துறை அமைச்சரான உமா பாரதி சரஸ்வதி நதியை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபடும் என்று பாராளுமன்றத்தில் அறிவித்தார். இதற்கான பெரிய திட்டத்தை அரியானா மாநில அரசு 2015 -ஆம் ஆண்டு தொடங்கியது. அப்போதைய முதலமைச்சர் மனோகர் லால் கட்டர் அறிவித்தார். இப்படிப் பேசும் தொடர் கதைக்குள் தானாக வந்து வண்டியில் ஏறி இருக்கிறார் ஆளுநர்.

**சிந்து சமவெளி எழுத்துருக்களின் ஆய்வுகள் இவர்களை எரிச்சலடைய வைத்திருக்கிறது. இரும்பின் காலம் குறித்த அறிவிப்பும் ஆய்வும் எரிச்சலடைய வைத்திருக்கிறது. ‘காலச்சுவடு’ இதழில் பி.ஏ.கிருஷ்ணன் என்பவர், அடி வயிறு எரிய இரும்பின் காலத் தொன்மையை நிராகரித்து எழுதி இருக்கிறார். பி.ஏ.கிருஷ்ணன் எல்லாம் வரலாற்றாசிரியர்கள் வேடம் தரித்து வரும் போது ஆளுநர் ரவியும் அதே வேடம் போட மாட்டாரா என்ன?**

●●

## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – 9

# அண்ணா கேட்டதை அவரது தமிழ்நாடு கேட்கிறது!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மொழிப் போர்க் களத்தின் ஒன்பதாவது மடல்.**

மொழிவழி மாநிலங்களாக உருவாக்கப்பட்ட இந்திய ஒன்றியத்தில், ஒரு மாநிலத்தில் பேசப்படும் மொழி மீது மற்றொரு மொழியைக் கட்டாயமாகத் திணிக்கும் போது அந்த மாநில மக்கள் பேசுகின்ற மொழியும் அதன் பண்பாடும் சிதைக்கப் படும். இந்தியும் சமஸ்கிருதமும் வலிந்து திணிக்கப்படுவதால் இந்திய மொழிகள் பலவும் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. தமிழ்நாடு தன் உயிரினும் மேலானத் தமிழையும் அதன் பண்பாட்டையும் உயிரைக் கொடுத்து காப்பாற்றியுள்ளது.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 1961ஆம் ஆண்டு எடுக்கப்பட்டபோது இந்தியாவிலிருந்த தாய்மொழிகளின் எண்ணிக்கை 1652 எனப் பட்டியலிடப்பட்டது.

> **தா**ய்மொழி என்பது ஒரு தேன்கூடு. அதில் கைவைப்பது ஆபத்து. கட்டாயமாக ஒரு மொழியைத் திணித்தால் அது பகையுணர்ச்சிக்கே இடம் கொடுக்கும். நாட்டின் ஒற்றுமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

மாநில மொழிகள் மட்டுமின்றி, பழங்குடிகள் - இனக்குழுக்கள் உள்ளிட்டோர் பேசுகின்ற மொழிகளும் இந்தக் கணக்கில் வரும். பத்தாண்டுகள் கழித்த 1971ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது 109 மொழிகள் மட்டுமே தாய்மொழிகள் பட்டியலில் இடம்பெற்றன. எப்படி இந்த திடீர் மாற்றம்?

இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள மொழிகளும், இவை தவிர, பத்தாயிரம் பேருக்கு மேல் பேசக்கூடிய மொழிகளும் மட்டுமே தாய்மொழி எனக் கணக்கிடப்படவேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறை வகுக்கப்பட்டதால், தாய்மொழிகளின் பட்டியலில் இருந்த 1500க்கும் மேற்பட்ட மொழிகள் தங்கள் தகுதியை இழந்தன என்று மொழியியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். தாய்மொழியாகவே அங்கீகரிக்கப்படாத மொழிகளைச் சேர்ந்தவர்கள் எப்படி இந்தியாவில் தங்கள் வாழ்வுரிமைக்கானத் தேவைகளை எதிர்கொள்வார்கள்? ஆதிக்கம் செலுத்தும் மொழியைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைதான் அவர்களுக்கு ஏற்படும். அடுத்த தலைமுறை தனது தாய்மொழியை இழந்து, ஆதிக்க மொழியே அனைத்தும் என்ற நிலைக்குத் தள்ளப்படும். அதனால்தான் மொழித் திணிப்பை திராவிட இயக்கம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

உலகின் மிகப் பெரும் வல்லரசாக இருந்த சோவியத் யூனியன் என்ற மாபெரும் ஒன்றியம் பல்வேறு மொழிகளைப் பேசும் தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. எனினும், அதில் பெரும்பான்மை மொழியான ரஷ்ய மொழி ஆதிக்கம் செலுத்தியது. சோவியத் யூனியன் சிதைவடைந்து பதினைந்துக்கும் மேற்பட்ட நாடுகளாகப் பிரிந்ததில் அரசியல்பொருளாதாரப் பின்னணிகளுடன் மொழி ஆதிக்கமும் ஒரு காரணமாக அமைந்தது.







இணைந்திருந்த சோவியத் யூனியனில் பெரும்பான்மை மொழிக்காரர்களாக இருந்த ரஷ்ய மொழிக்காரர்கள், பிரிந்து சென்ற நாடுகளில் சிறுபான்மையினராக மாறினர். எங்கள் ரஷ்ய மொழியையும் ஆட்சி மொழியாக ஆக்குங்கள் என்று லாட்வியா உள்ளிட்ட நாடுகளிடம் அவர்கள் கேட்கக் கூடிய நிலைமை உண்டானது.

## உங்களில் ஒருவன்

**தாய்மொழி என்பது ஒரு தேன்கூடு. அதில் கைவைப்பது ஆபத்து. கட்டாயமாக ஒரு மொழியைத் திணித்தால் அது பகையுணர்ச்சிக்கே இடம் கொடுக்கும். நாட்டின் ஒற்றுமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.** மொழித்திணிப்பினால் பிளவுபட்ட தேசங்களின் வரலாறு நம் பக்கத்திலேயே இருக்கிறது.

1947ல் இந்தியா விடுதலையடைந்த போது, பாகிஸ்தான் என்ற தனிநாட்டை இந்தியாவிலிருந்து பிரித்து சுதந்திரமளித்தது பிரிட்டிஷ் அரசு. பாகிஸ்தானின் ஒரு பகுதியாக கிழக்கு வங்காளம் இணைந்தது. அதாவது, அன்றைய பாகிஸ்தான் என்பது இந்தியாவுக்கு மேற்கில் ஒரு பகுதியையும், கிழக்கில் ஒரு பகுதியையும் கொண்டிருந்தது. பாகிஸ்தானில் பெரும்பான்மை மக்களின் மொழி, உருது. கிழக்கு வங்காள மக்களின் மொழி, வங்காளம். இரண்டு பகுதி மக்களுக்கும் பண்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் நிறைய வேறுபாடுகள் உண்டு. ஆனால், உருது மொழி மட்டுமே ஒட்டுமொத்த பாகிஸ்தானின் தேசிய மொழியாக அறிவிக்கப்பட்டது.

கிழக்கு வங்காளத்தினர் தங்கள் தாய் மொழியான வங்காளத்தையும் தேசிய மொழியாக அறிவிக்கக் கோரி, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தனர். மக்கள் பங்கேற்புடன் போராட்டங்களை நடத்தினர். பாகிஸ்தானில் அதிகாரத்தில் இருந்தவர்கள் கிழக்கு வங்காள மக்களின் குரலை மதிக்கவில்லை. வங்காள மொழிக்கு ஆதரவான போராட்டத்தையும் பேரணிகளையும் தடை செய்தனர். 1952ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த மாணவர்கள், தங்கள் தாய்மொழியைத் தேசிய மொழியாக அறிவிக்கக் கோரி, டாக்கா நகரில் தடையை மீறி நடத்திய பேரணியின் மீது பாகிஸ்தான் காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் 5 மாணவர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

தாய்மொழிக்காக உயிரிழந்த வங்காள மாணவர்களின் நினைவு நாளை ஒவ்வொரு ஆண்டும் அந்நாட்டு மக்கள் கடைப்பிடித்தனர். 1971ல் கிழக்கு வங்காள மக்களின் விடுதலைப் போராட்டம் உச்சத்தை எட்டியது. இந்திய பிரதமர் இந்திரா காந்தியின் ஆதரவுடன் விடுதலைப் போராட்டம் வென்றது. பாகிஸ்தானிலிருந்து கிழக்கு வங்காளம் விடுதலை பெற்று, பங்களாதேஷ் என்ற புதிய நாடு உருவானது. பாகிஸ்தான் மக்களும், பங்களாதேஷ் என்கிற வங்கதேச மக்களும் மதத்தால் ஒன்றுபட்டவர்கள். ஆனால், மொழியால் வேறுபட்டவர்கள். வங்கதேச மக்கள் மீது பாகிஸ்தான் நடத்திய மொழித் திணிப்பே புதிய நாடு உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

பங்களாதேஷ் விடுதலைக்காக இந்திய ராணுவம் பங்கேற்ற போரின்போது,



இந்தியாவிலேயே மிக அதிக நிதியை அளித்த மாநிலம் என்ற பெருமையைப் பெற்றது நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் ஆட்சி நடைபெற்ற தமிழ்நாடு. பிரதமர் நேரு ஆட்சிக்காலத்தில் இந்திய எல்லை மீது சீனா படையெடுத்தபோதும், இந்தியா - பாகிஸ்தான் போரின் போதும்

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்